இந்திய அரசாங்கம் மருந்துகளின் பக்க விளைவுகளை ஆவணப்படுத்தி, மக்களை பாதுகாப்பதற்காகவும், தரமற்ற மருந்துகளை புழக்கத்திலிருந்து தடை செய்வதற்காகவும் மற்றும் சிறந்த மருந்துகளை மட்டுமே மக்கள் பயன்படுத்தவேண்டும் என்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பே இந்த “மருத்துவக்கண்காணிப்பு பிரிவு”(*Pharmacovigilance*) என்பதாகும்.

நம் நாட்டில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி, மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவத் துறைகளில் மருந்துகளால் ஏற்படும் பாதிப்பினை பதிவு செய்வதற்காக பல நிறுவனங்களில் மருத்துவ கண்காணிப்பு பிரிவு தொடங்கப்பட்டு, செயல்பட்டு கொண்டிருக்கிறது. அதில் சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையமும் ஒன்றாகும்.

சித்தர்களால் உருவாக்கப்பட்ட, நம் தாய் மண்ணின் மருத்துவமாகிய, நம் தமிழ் மருத்துவத்தில் ஏதும் குறைகள் இருக்காது என்றே நாம் முழுமையாக ஏற்றுக் கொள்வோம். இருந்த போதிலும் மேற்கூறிய முறைகளாகிய மருந்து தயாரிப்பிலோ, மருத்துவரின் செயல்பாட்டினாலோ, நோயளியின் செயல்பாட்டினாலோ, செவிலியர் மற்றும் மருந்தாளுநரின் செயல்பாட்டினாலோ உண்டாகும் தவறு அல்லது சிறு கவனக்குறைவும் மக்களுக்கு தீங்கு விளைவிக்கலாம். எந்த ஒரு அறிவியலும், அதன் வளர்ச்சியும் மக்களுக்காகவும் அவர்களின் பாதுகாப்பிற்காகவும் மட்டும் தான். மக்கள் பாதுகாப்பிற்கு மீறிய எந்த ஒரு அறிவியலோ அல்லது ஆராய்ச்சியோ இல்லை. எனவே பக்க விளைவு / ஒவ்வாமை / கள்ளப்பிணி போன்றவற்றை பதிவு செய்தல் மூலம், அது ஏற்படுவதற்கான காரணத்தைக் கண்டறிய முடியும், மீண்டும் அது ஏற்படாதவாறு, அந்த தவறுகளை மாற்றியமைக்க முடியும்.

நோயாளியின் பாதுகாப்பு பொருத்தவரை போலியான மருந்துகளும், போலியான மருத்துவர்களும், போலியான விளம்பரங்களும் மிகவும் ஆபத்தானவை. சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி போன்ற இந்தியமுறை மருத்துவம் சார்ந்த போலிகளைப் பற்றிய தகவல்களை பொதுமக்கள் புகார்அளிக்கலாம். அதற்கு நாம் ஒரு சிறிய அக்கறை அல்லது ஒரு மெனக்கெடல் மூலம் ஒரு படி முன்னெடுத்து வைக்க வேண்டும். இந்த சிறிய முயற்சி தங்களுக்கும், அடுத்துவரும் சந்ததியினருக்கும் பெரும் பயனைத் தரும். மேலும் நமது சித்த மருத்துவமும் பல படிநிலைகளைக்கடந்து, உலகம் முழுதும் வளர்ந்து, உலகமக்கள் அனைவருக்கும் நோயற்ற வாழ்வைத்தந்து மனித சமுதாயம் தழைத்தோங்கும்.

## புகார் அளிக்க வேண்டியவை

- போலியான மருந்துகள்.
- சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஹோமியோபதி போன்ற மருந்துகளின் போலியான விளம்பரங்கள்.
- சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஹோமியோபதி போன்ற இந்திய முறை மருத்துவத்தின் மருந்துகளை உண்பதால், ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் போன்றவற்றை முறையாக பதிவு செய்தல் வேண்டும்

## புகார் அளிக்க / தொடர்புக்கு


***மருந்துகள் கண்காணித்தல் பிரிவு:***

***மரு. P. தேன்மொழி, Program Coordinator***

***மரு. G. காருண்யா, Junior Research Fellow***

***(9597532977).***

மின்னஞ்சல்: *scripharmacovigilance@gmail.com*

கட்டணமில்லா தொலைபேசி:*1800 5990 828*

ஆண்ட்ராய்டு அலைபேசி செயலி : *SiddAR*

[மருந்துகளால் ஏற்படும் பக்க விளைவைப் பதிவு செய்ய உதவும் செயலி].


*The COVID-19 pandemic has unveiled the huge challenges and risks health workers are facing globally including health care associated infections, violence, stigma, psychological and emotional disturbances, illness and even death. Furthermore, working in stressful environments makes health workers more prone to errors which can lead to patient harm. Therefore, the World Patient Safety Day 2023:*

*Theme*

## *"Engaging patients for patient safety"*




கள்ளப்பிணி
(ADR)

மருத்துவக்கண்காணிப்பு
(Pharmacovigilance)

# PERIPHERAL PHARMACOVIGILANCE CENTRE

**(PPvC)**

**(Centre Code : Si-NIS/001)**



World
Patient Safety
Day 17 September 2023

**மருத்துவப்பணியாளர்களின் பாதுகாப்பே !**
**நோயாளர்களின் முதன்மையான பாதுகாப்பு !!**


## Siddha Central Research Institute

(Central Council for Research in Siddha
Ministry Of AYUSH, Govt.of India)
Anna Hospital Campus, Arumbakkam,
Chennai - 600106.


***First, do no harm** - Hippocrates*

## உலக நோயாளர் பாதுகாப்பு தினம்

இயல்பாக, எல்லா மருத்துவமுறையும் மக்களின் துன்பத்தை நீக்கும் பொருட்டு நல் மருந்துகளை வழங்கி நல்ல விளைவுகளை தரக்கூடியதாக உள்ளது. இருப்பினும், சில நேரங்களில் சில நபர்களுக்கு ஒரு சில மருந்துகள், ஒரு சில நேரங்களில், ஒரு சில நபர்களுக்கு ஒவ்வாமை (Allergy), பக்கவிளைவு (Side effect) அல்லது கள்ளப்பிணி (மருந்தினால் ஏற்படும் வேறு நோய்) போன்றவைகள் ஏற்பட்டு நோயாளிக்கு தீங்கு தருவதாக அமைந்து விடுகிறது. எல்லா மருந்துகளும், எல்லா மக்களுக்கும், எல்லா நேரங்களிலும் நூறு விழுக்காடு பாதுகாப்பானது என்று கூற இயலாது. மருந்துப் பொருட்கள் தயாரிப்பின் போது ஏற்படும் தவறாலும், மருத்துவரின் தவறாலும், மருந்தாளுநரின் தவறாலும் அல்லது நோயாளர் செய்யக்கூடிய தவறாலும், மருந்துகளால் மருத்துவத்தில் குறை ஏற்படலாம். இதனால் ஏற்படக்கூடிய விளைவு சிறியதாகவும் இருக்கலாம் அல்லது இழப்பை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு பெரிய விளைவாகவும் இருக்கலாம்.

ஒரு மருந்து அல்லது மருத்துவம் சிறப்பான முறையில் பலனளிக்க, கீழ்க்கண்ட 4 காரணிகள் ஒருமித்து செயல்பட வேண்டும். இதனை வள்ளுவரின் குறள் மூலம் நாம் உணரமுடியும்.

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து

குறள் எண்: 950 - அதிகாரம்: மருந்து

இதில்

உற்றவன் - நோயுற்றவன் (Patient)

தீர்ப்பான் - மருத்துவர் (Doctor)

மருந்து - தனிமருந்து (அ) கூட்டு மருந்து மற்றும் அதன் தொடர்புடையவை (Medicine, its Process, and Manufacturer)

உழைச் செல்வான் - மருந்தினை கொடுப்பவர் (Pharmacist and Nurses).

உடலை காப்பதே மருந்து. ஒரு முழுமையான மருத்துவம் என்பது ஒரு காரணியைச் சார்ந்தது மட்டுமல்லாது மேற்கூறிய நால்வரின் கூட்டு முயற்சியே ஆகும். மேற்கூறிய இந்த நிலையை காப்பது ஒரு மருத்துவரின் கடமை ஆகும். இந்த உயரிய நோக்கத்தில் மக்களுக்கான பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வு மிகவும் முக்கியமானது. இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டது தான் இந்த **“உலக நோயாளர் பாதுகாப்பு தினம்”.**

## நோயாளர்கள் கவனிக்க வேண்டியவை

- நோயாளர்கள் முதலில் மருத்துவரை அணுகும் போது இவர் போலி மருத்துவரா, இல்லை அரசு பதிவுப் பெற்ற மருத்துவர் தானா என்று நன்கு அறிந்த பின்னர் அவர்களின் ஆலோசனையைப் பெற வேண்டும்.
- நோயாளர்கள் தங்களது குறிகுணங்களை முழுமையாகக் கூற வேண்டும், மருத்துவரிடம் எதையும் மறைத்தல் கூடாது.
- தங்களுக்கு ஏற்பட்டுள்ள நோயைப் பற்றியும் அதன் பாதிப்பு பற்றியும் நோயாளர்களுக்கு ஒரு முழுமையான புரிதல் இருக்கவேண்டும்.
- மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட மருந்தைப் பற்றிய புரிதல் வேண்டும்.
- ஒருமுறை மருத்துவரின் ஆலோசனையின்படி பெற்றுக்கொண்ட மருந்துச் சீட்டை பயன்படுத்தி மீண்டும் மீண்டும் மருந்து வாங்கி பயன்படுத்துதல் கூடாது.
- மருத்துவரின் ஆலோசனையின் படி அதன் அளவு, அனுபானம், பத்தியம், உட்கொள்ள வேண்டிய நாள் அளவு, பயன்படுத்த வேண்டிய முறை உட்பிரயோகம் மற்றும் வெளிப்பிரயோகம், ஆகியவற்றை நன்கு கேட்டுப் புரிந்து, பின்பு உட்கொள்ளவேண்டும்.
- மருந்தகங்களில் இருந்து மருந்துகளை வாங்கும் போது அந்த மருந்து நல்ல தரமான தயாரிப்பு நடைமுறைகள் (Good Manufacturing Practice- GMP) தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டதா? , உரிய அனுமதி மற்றும் உரிமம் பெறப்பட்டுள்ளதா (License No.), லேபிளில் மருந்தின் பெயர், சேரும் பொருட்கள், உள் பிரயோகமா அல்லது வெளிப்பிரயோகமா, அளவு, நாள் அளவு , தயாரிப்பு நாள், காலாவதியாகும் நாள், முன்னெச்சரிக்கை ஆகியவை இடம் பெற்றுள்ளதா என்று கவனித்தல் வேண்டும்.

## நோயாளர் செய்யும் தவறுகள்

- குறி குணங்களை முழுமையாக கூறாமல் விடுத்தல்.
- மருத்துவர் கூறிய நாள் அளவை விட அதிகரித்தோ அல்லது குறைத்தோ மருந்துகளை உட்கொள்ளல்.
- மருத்துவரின் ஆலோசனையின்றி மருந்தின் அளவை அதிகரித்தோ குறைத்தோ எடுத்துக் கொள்ளல்.
- மருத்துவர் கூறிய அனுபானத்தை மாற்றி எடுத்துக் கொள்ளல்.
- பத்தியத்தை கைவிடல் அல்லது பத்தியத்தை அவ்வப்போது மீறிவிடுதல்.
- அறியாமையால் அல்லது தவறுதலாக உள் மருந்தை வெளி மருந்தாகவும் வெளி மருந்தை உள் மருந்தாகவும் மாற்றி எடுத்துக் கொள்ளல்.

## மருத்துவரின் தவறுகள்

- மருத்துவர்கள் மருந்து சீட்டை எழுதும் போது பெயர், வயது, நோய், மருத்துவம், மருத்துவ முறைகள் ஆகியவற்றை தெளிவாக குறிப்பிடாததால் ஏற்படும் பிழை.
- நோயாளர்களின் குறி குணங்களையும் நோய் அறிகுறிகளையும் சரியாக கணிக்க தவறுதலால் ஏற்படும் பிழை.
- மருந்துகளின் எதிர்பார்க்கப்பட்ட பக்க விளைவை நோயாளர்களிடம் எச்சரிக்க தவறுதல்.
- மருத்துவர்கள், நோயளரின் முந்தைய வரலாற்றை அறியாததால் ஏற்படும் பிழை.
- நோய் கணிப்பில் ஏற்படும் பிழை.
- மருந்தின் அளவு, அனுபானம், பத்தியம், நாள் அளவு, இவை கூறும்போது ஏற்படும் பிழை. வெளிப்புற சிகிச்சை செய்யும் பொழுது ஏற்படும் பிழை.

## மருந்துகளால் ஏற்படும் தவறுகள்

- மருந்துகளின் செய்முறையில் உள்ள தவறு அல்லது காலம் கடந்த மருந்து அல்லது போலியான மருந்து மற்றும் மருத்துவ முறைகளால் ஏற்படக்கூடிய பிழை.
- பொதுவாக மருந்துகளின் செய்முறையில் பல்வேறு நிலைகள் உள்ளது. எடுத்துக்காட்டாக, மருந்து பொருட்களை சேகரித்தல், சுத்திகரித்தல், அறிவுறுத்தப்பட்ட முறையில் நெறிமுறையாக மருந்துகள் செய்தல், மருந்தினை பேக்கிங் (Packing) செய்தல், மருந்தின் மீது லேபிள் ஒட்டுதல் [அதில் அளவு, நாள் அளவு, தயாரிப்பு நாள், காலாவதியாகும் நாள், முன்னெச்சரிக்கை ஆகியவை இடம் பெற்றிருத்தல் வேண்டும்] இதுபோன்ற செய்முறைகளில் ஏதேனும் பிழை ஏற்படலாம். அதனால் பக்கவிளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

## மருந்துகொடுப்பவர்களால் ஏற்படும் தவறுகள்

- மருந்தாளுநர், வேறு நோயாளரின் மருந்துச்சீட்டில் உள்ள மருந்துகளை மாற்றிக் கொடுத்துவிடுவதால் ஏற்படும் பிழை.
- மருந்தாளுநர் மருந்து சீட்டில் உள்ள மருந்துகளை மாற்றிக் கொடுப்பதால் ஏற்படும் பிழை.
- மருந்தாளுநர் மருந்தினை பயன்படுத்தும் முறையைப் பற்றி கூறும் பொழுது ஏற்படக் கூடிய பிழை.